بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# :ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் - அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக) அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 8.08.2014 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

Summary of the Friday Sermon - 8, August 2014 (Tamil)

## சிறப்பான உதவிக்காக துஆக்களின் சக்தி

தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் சூரத் அந் நமலின் 63 வது வசனத்தை ஓதி அதன் பொருளையும் கூறினார்கள்:-

أَمَّن يُجِيبُ الْمُضْطَرَّ إِذَا دَعَاهُ وَيَكْشِفُ السُّوءَ وَيَجْعَلُكُمْ خُلَفَاءَ الْأَرْضِ ۗ أَإِلَٰهٌ مَّعَ اللَّهِ ۚ قَلِيلًا مَّا تَذَكَّرُونَ

பொருள்: துன்பத்திற்காளானவர், அவனிடம் பிரார்த்தனை செய்யும் போது அவருடைய வேண்டுதலுக்குப் பதிலளித்து (அவரது) தீங்கை அகற்ற (வேண்டுதல் புரியும்) உங்களை இப்பூமி முழுவதற்கும் வாரிசுகள் ஆக்குபவன் எவன் ? (இத்தகு ஆற்றல் பெற்ற) அல்லாஹ்வுடன் வேறு கடவுள் உண்டா ? நீங்கள் அறவே உணர்வதில்லை. (27:63)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தன்னுடைய ஜமாஅத் மக்களுக்கு துஆவின் பக்கம் கவனம் செலுத்துங்கள் என்று கவனம் செலுத்தி வந்தார்கள். ஏனென்றால் ஜமாஅத்தின் முன்னேற்றம், ஜமாஅத்தின் வெற்றி மற்றும் எதிரிகளுடைய திட்டங்கள் மேலும் அவர்களின் சூழ்ச்சியிலிருந்து இரட்சிப்பை பெறுவது துஆவிலிருந்தே கிடைக்கின்றது. அன்னார் வெளிப்படையாக கூறினார்கள். அதாவது நாம் வெற்றி பெறுவதற்கான ஆயுதம் துஆவே ஆகும். ஆக, நாம் வெற்றிகளை துஆவின் மூலமே காண்போம். மேலும் நாம் ஒவ்வொரு எதிரிகளையும் துஆவின் மூலமே வெற்றி கொள்ள வேண்டும். பிறகு துஆவின் இந்த முக்கியத்துவத்தை முன்னிறுத்தியவாறு எந்த அளவிற்கு நாம் துஆவின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். மேலும் எந்த அளவிற்கு நாம் இந்த நோக்கத்திற்காக துஆவின் பக்கம் கவனம் செலுத்துகின்றோம். இதனைப் பற்றி நாம் ஒவ்வொருவரும் நம்முடைய நிலைமைகளைப் பார்த்து கணக்கிட முடியும். ஆராய முடியும்.....

ரமலானில் துஆவின் பக்கம் நமக்கு கவனம் மற்றும் துடிப்பு இருந்ததைப் போன்று ரமலானிற்குப் பிறகு துஆவின் பக்கம் குறிப்பாக நாம் கவனமும், துடிப்பும் இருப்பதில்லை. இந்த நேரத்தில் உலகத்தின் நிலைமையும், முஸ்லிம் சமுதாயத்தின் நிலைமையும், குறிப்பாக பாலஸ்தீனத்தின் மீது இஸ்ராயீல் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கக்கூடிய அநீயாயமான தாக்குதல் அதில் நேற்று வரை தற்காலிகமான தடை ஏற்பட்டிருந்தது. ஆனால் இன்று மீண்டும் ஆரம்பித்துவிட்டது என்று நான் கேள்விப்பட்டேன். எவ்வாறிருப்பினும் அல்லாஹ் விரைவாக நிரந்தரமான போர் நிறுத்தத்தை ஏற்படுத்தக்கூடிய நிலைமையை ஏற்படுத்துவானாக. மேலும் இந்த அநீதி முடிவு பெறட்டுமாக. மேலும் நாம் இதனையும் பார்க்கின்றோம். அதாவது முஸ்லிம்கள் ஒருவர் மற்றொருவர் மீது அநீதி இழைப்பதும், தலையை துண்டிப்பதும், கொலை செய்வதும் உச்ச கட்டத்தை எட்டியுள்ளது. மேலும் இந்த அநீதியின் உச்சகட்டம் கலீமா கூறக்கூடியவர்களின் தரப்பிலிருந்து அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதரின் பெயரால் அஹ்மதிகளின் மீது அநீதி இழைக்கின்றனர். மேலும் கேலிக்கை செய்தவாறு இந்த அநீதியை தொடர்ந்து செய்வதற்காக

சாக்குப் போக்குகளையும் தேடுகின்றனர். மேலும் சொற்பொழிவும் கொடுக்கப்படுகின்றது. ஒவ்வொரு மட்டத்திலும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அஹ்மதிகளுக்கு துன்பம் கொடுப்பது, மேலும் அவர்கள் மீது அநீதி இழைப்பது தற்போது பாகிஸ்தானில் முல்லாக்களின் தாக்கத்தின் காரணமாக அஹ்மதி அல்லாதவர்களின் அதிகமானவர்கள் அல்லது பெரும்பான்மையான மக்களின் சேவையாக ஆகிவிட்டது. மேலும் அடுத்து வரக்கூடிய சந்ததிகளில் குழந்தைகளிடமும் இந்த விஷத்தை ஊட்டுகின்றனர். அவர்களின் சிந்தனையில் விஷத்தன்மை ஊட்டப்படுகின்றது. தற்போது மார்க்கம் என்றால் என்ன என்றும் எதிர்ப்பு என்றால் என்றும் அறியாத குழந்தைகளின் நாவிலிருந்தும் கூட அஹ்மதிகள் காஃபிர்கள் ஆவார்கள். அவர்களை கொலை செய்வது ஆகுமானதாகும் என்ற வார்த்தை அவர்களின் நாவிலிருந்து வெளிவருகின்றது..... இந்த சோதனைக்குரிய காலகட்டத்தில் நாம் முன்பை விட அதிகமாக அல்லாஹ்வின் பக்கம் குனிய வேண்டிய அவசியம் இருக்கின்றது. ஆக, நம்முடைய துஆவில் குறை ஏற்பட விடாதீர்கள். மற்ற முஸ்லிம்கள் ஒருவர் மற்றொவருவர் மீதுள்ள அநீதிக்கான பதிலை அநீதியின் மூலமாகவே கொடுத்து கணக்கு தீர்த்துக் கொள்கின்றனர். ஆனால் நாம் ஒவ்வொரு அநீதியையும் துஆக்களின் மூலமே முடிவுக்கு கொண்டு வர வேண்டும். அல்லாஹ்வின் முன்னிலையில் குனிந்து அவனிடம் துஆ செய்தவாறு முடிவுக்கு கொண்டு வர வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தன்னுடைய ஒரு கவிதையில் இவ்வாறு கூறுகிறார்கள்: எதிரிகளின் கூச்சல் மிக அதிகமாக எழுகின்ற போது நாம் நமது அன்பான நண்பனான இறைவனோடு ஒன்றிவிட்டோம். ஆக, இறைவனோடு ஒன்றிவிட வேண்டிட தேவை உள்ளது. தன்னிடத்தில் எப்படிப்பட்ட நிலைமையை ஏற்படுத்த வேண்டிய தேவையுள்ளது என்றால் அது அர்ஷை உலுக்கக்கூடிதாக இருக்க வேண்டும். அனைவரது துஆக்களும் ஒரே திசையில் இருக்கக்கூடிய துஆக்களை அனைவரும் செய்ய வேண்டிய அவசியம் இருக்கின்றது. வெவ்வேறான துஆக்களாக இருக்கக்கூடாது...... ஆக, நம் ஒவ்வொருவரது விருப்பமும் இந்த சோதனையின் காலகட்டம் விரைவாக முடிவு பெற வேண்டும் என்றிருப்பதனால், நாம் நம்முடைய துஆக்களை ஜமாஅத்தின் முன்னேற்றம் மற்றும் எதிரிகளின் தீங்கிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்காக செய்ய வேண்டிய தேவையுள்ளது...... ஆக, பாகிஸ்தான் அஹ்மதிகள் அது செல்வந்தராக இருந்தாலும் சரி, ஏழையாக இருந்தாலும் சரி, ஆண்களோ அல்லது பெண்களோ அவர்கள் அனைவருக்கும் இதன் பக்கம் குறிப்பான கவனம் செலுத்த வேண்டிது அவசியமாகும். ஏனென்றால் அஹ்மதிகளில் தற்போது பாகிஸ்தானில் தான் அதிகமான அநீதி இழைக்கப்படுகின்றது. மேலும் உலகத்திலுள்ள அஹ்மதிகளும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டியது கட்டாயமாகும். ஏனென்றால் உலகம் எஞ்சியிருப்பது அஹ்மதிய்யத்தின் வெற்றியின் மூலமாகவேயாகும். முஸ்லிம் சமுதாயம் அல்லாஹ்வின் அருளைப் பெறுவதும் அஹ்மதிய்யத்தின் வெற்றியுடனே தொடர்புடையதாகும். அநீதியை முடிவுக்கு கொண்டு வருவதும் இதனுடனே தொடர்புடையதாகும்.

அது பாலஸ்தீனியத்தை அநீதியிலிருந்து வெளியே கொண்டு வருவதாக இருந்தாலும், முஸ்லிம்களை அநியாயக்கார ஆட்சியாளர்களிடமிருந்து சுதந்திரமடையச் செய்வதாக இருந்தாலும் அதனுடைய உத்தரவாதம் அஹ்மதிகளின் துஆவின் மூலமே நடக்க இயலும். இந்த துஆக்களின் உரிமையை செலுத்துவது நம்மீது கடமையாகும். தற்போது அநீதியின் ஆட்டுரலில் அஹ்மதிகளே சிக்கியுள்ளனர். எனவே, நம்முடைய துஆக்கள் தான் நிரந்தரமான துஆக்களின் வடிவத்தைப் பெற்று நம்முடைய சுதந்திரம் மட்டுமின்றி மனித இனத்தையும் அநீதியிலிருந்து இரட்சிப்பை வழங்குவதற்கான காரணியாக அமையும். ஆக, நம்முடைய பொறுப்பை உணர வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். **சோதனையின் போதே துஆக்களின் வியக்கத்தக்க விளைவுகள் வெளிப்படுகின்றன. உண்மை என்னவென்றால், நம்முடைய இறைவன் துஆவின் மூலமே அறியப்படுகின்றான்.**

ஆக, நான் கூறியது போன்று இன்று அஹ்மதிகளைத் தவிர வேறு யார் அதிகமாக இந்த அநீதிக்கு உள்ளாகியுள்ளனர். இன்று அஹ்மதிகளைத் தவிர வேறு யார் மீது அதிகமான அநீதிகள் சில முஸ்லிம் நாடுகளில் செய்யப்படுகின்றது. இந்த நாட்டிலுள்ள பெரும்பாலான நல்லவர்கள், இன்னும் சொல்வதென்றால் அனைவரது நற்பண்புமே ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் கூறியது போன்று ஊமையான நற்பண்பாக திகழ்கின்றது. வியக்கத்தக்க துஆக்களின் அருளை பெறுவதற்காக நமக்கு குறிப்பான கவனம் செலுத்த வேண்டிய தேவையுள்ளது. நான் ஓதிய வசனத்திலும் அல்லாஹ் இதனையே கூறுகின்றான். அதாவது பாருங்கள்! இப்படிப்பட்ட முஸ்தரான நிலைமையில் இருப்பவரது துஆவை எவன் ஏற்றுக் கொள்கின்றான்? அதவாது அநீதிக்குள்ளான மக்களின் துஆக்களை எவன் ஏற்றுக் கொள்கின்றான்? அல்லாஹ்வே ஏற்றுக் கொள்கின்றான். முஸ்தர் என்றால் நாலா புறத்திலும் கஷ்டத்தையும், சோதனையையும் காண்கின்றார். தன்னுடைய வெற்றிக்கு எவ்வித வழியும் அவருக்கு தென்படவில்லை. மேலும் ஒரேயொரு வழி மட்டும் தான் தென்படுகின்றது. அது இறைவன் பக்கம் செல்லக்கூடிய வழியாகும். இதுவே முஸ்தர் என்று அழைக்கப்படுகின்றது. இறைவன் கூறுகின்றான். உலகத்தினுடைய அனைத்து வழிகளும் அவர்களுக்காக அடைக்கப்பட்டு இருக்கும் நேரத்தில் என் பக்கம் வருபவர்கள் தான் முஸ்தர் ஆவார்கள்.....

ஆக, எவர் ஒருவர் இப்படிப்பட்ட முஸ்தராக ஆகிவிட்டாரோ மேலும் இறைவனைத்தவிர வேறு எவரையும் அடைக்கலம் கொடுக்கக்கூடியவராக அவர் கருத மாட்டாரோ, மேலும் இறைவனைத் தவிர வேறு எவரையும் இந்த சோதனையிலிருந்து இரட்சிப்பை வழங்கக்கூடியரவாக கருத மாட்டாரோ அவர் தான் உண்மையான முஸ்தர் ஆவார். மேலும் அப்படிப்பட்டவருடைய துஆக்கள் வியக்கத்தக்கதாக இருக்கின்றது. துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு நாம் ஒவ்வொருவரும், எப்படிப்பட்ட கஷ்டமாக நிலைமையிலும் அல்லாஹ் தான் உதவி செய்யக்கூடியவனாக இருக்கின்றான். அவனைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை என்ற நம்பிக்கையை நாம் நம்மிடம் உருவாக்கிக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட நிலைமை உருவாகிவிட்டால், அநீதிக்குள்ளான இப்படிப்பட்ட முஸ்தர்களிடம் அல்லாஹ் ஓடி வருகின்றான். மேலும் தன்னுடைய வாக்குறுதிக்கேற்ப அவனுடைய கஷ்டங்களையும் துன்பங்களையும் நீக்குகின்றான். அவருடைய கஷ்டங்கள் காற்றில் பறந்து விடுகின்றன. அது தனிப்பட்ட நபருடைய துன்பங்களாகவும், துயரங்களாகவும் இருந்தாலும் சரி; ஜமாஅத்தினுடைய துன்பங்களாகவும், துயரங்களாகவும் இருந்தாலும் சரி.

மேலும் அல்லாஹ் கூறுகின்றான். இந்த துன்பங்களையும், துயரங்களையும் மட்டும் நீக்க மாட்டான். மாறாக, அல்லாஹ் எப்போது அருள்களை வழங்குகின்றானோ அப்போது அவனுடைய அருள்கள் கணக்கில் அடங்காதவையாக இருக்கின்றன. எவன் எந்த அளவிற்கு வேண்டுமானால் அவனுடைய அருள்களை அதிகரிக்க இயலும். ஆக, இங்கு எப்போது துன்பங்களில் இருக்கின்ற மூஃமின்களுடைய துன்பங்களை அகற்றுவதாக அல்லாஹ் கூறுகின்றானோ அதனுடன் மேலும் கூறுகின்றான். யஜ்அல்லகும் குலஃபாஅல் அர்ஜ் அதாவது அவன் உங்களை இந்த பூமிக்கு வாரிசாக்குகின்றான். மேலும் மிகப் பெரிய அநீயாயக் –காரர்களையும், சர்வாதிகாரர்களையும், கிளர்ச்சியாளர்களையும் அழித்துவிட்டு அநீதிக்குள்ளான மற்றும் பலகீனமானவர்கள் என்று கருதப்பட்டவர்களை அவர்களுடைய இடத்தில் அமர

வைக்கிறான். ஆக, எங்கு தனிப்பட்ட முறையில் அநீதிக்குள்ளானவரின் துஆவை கேட்டு அல்லாஹ் அவருடைய துன்பங்களை அகற்றுகின்றானோ அங்கு சமுதாய அளவிலும் அவர்களுடைய துன்பங்களையும் சோதனைகளையும் நீக்கிவிடுகின்றான். இதைத் தான் திருக்குர்ஆனின் இன்னொரு இடத்திலும் கூறுகின்றான். அதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், முந்தைய சமுதாயங்கள் எப்போது நபிமார்களோடும், அவர்களுடைய சமுதயாத்தோடும் அநீதியான முறையில் நடந்து கொண்டார்களோ அப்போது நாம் அவர்களை அழித்து விட்டோம். மேலும் அநீதிக்குள்ளானவர்களுக்கு அவர்களுடைய இடத்தை கொடுத்தோம். மிகப் பெரிய ஆட்சிப் பொறுப்பில் இருக்கக் கூடியவர்களையும், சர்வாதிகாரர்களையும் அவர்களுடைய பெயரையும் கூட நான் அழித்து விட்டேன் என்று அல்லாஹ் கூறுகின்றான். ஆக, இந்த சட்டம் எவ்வாறு முந்தைய சமுதாயத்தில் நிலைத்திருந்ததோ அவ்வாறே முந்தைய சமுதாயத்திலும் நிலைத்திருந்தது.

ஆக, அல்லாஹ் அநீதியாயக்காரர்களை அழிக்கின்றான். ஆனால் எப்போது அநீதிக்குள்ளானவர்கள் முஸ்தராக மாறி மதா நஸ்ருல்லாஹ் என்ற உள வேதனையோடு துஆக்கள் செய்வார்களோ அப்போது அல்லாஹ்வின் கருணை வெளிப்பட்டு ஆற்றல் மற்றும் பெரும்பான்மை என்ற ஆணவத்தில் எந்த மக்கள் இருக்கின்ற அந்த அநீயாயக்காரர்களுக்கு விரைவாக முடிவிற்கான ஏற்பாட்டையும் செய்து விடுகின்றது. அல்லாஹ் அவர்களுக்கு அறிவை வழங்குவானாக. இல்லையென்றால் இவர்களுடைய ஆற்றலும், பெரும்பான்மையும் தான் இவர்களுடைய அழிவிற்கு காரணமாகிவிடும்.....

நாம் தனிப்பட்ட நோக்கத்திற்காக செய்யக்கூடிய துஆக்களைப் போன்றே ஜமாஅத்தின் கஷ்டமும் நீங்குவதற்காக நாம் துடிப்புடன் துஆ செய்ய வேண்டிய தேவையுள்ளது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். துஆவிற்கான நிபந்தனை என்னவென்றால் அதிகமாக மற்றும் மீண்டும் மீண்டும் செய்ய வேண்டும். ஆக, ரமலானில் துஆ செய்து விட்டோம். அதுவே போதுமானது என்று எண்ணுவது சரியானதல்ல என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இப்போது நமக்கு தொடர்ச்சியாக துஆ செய்வதன் அவசியம் இருக்கின்றது. மேலும் மனிதனுக்கு தொடர்ச்சியாக எப்போதும் துஆ செய்வதற்கான அவசியம் இருக்கின்றது. எப்போது அல்லாஹ் நமக்கு வெற்றியை வழங்குவானோ அப்போதும் இறையச்சயத்தின்படி நடந்தவாறு அவனுடைய அருளை பெறுவதற்காக தொடர்ந்து துஆ செய்ய வேண்டியது அவசியமாகும். அல்லாஹ்வுடனான தொடர்பில் எவ்வித குறைபாடும் இருக்கக்கூடாது. மேலும் ஒரு நம்பிக்கையாளர் ஒருபோதும் அதை ஏற்றுக் கொள்ளவும் மாட்டார். துன்பத்திலும் நமக்கு அவனை நினைவு கூர்வது அவசியமாகும். அதே போன்று எளிமையிலும், மகிழ்ச்சியான நேரத்திலும் நாம் அவனை நினைவு கூர்வது அவசியமாகும். ஆக, ஒரு நம்பிக்கையாளர் ஒருபோதும் சுயநலவாதியாக இருக்க மாட்டார். தற்காலிகமான மற்றும் அந்த நேரத்திற்கு மட்டும் துஆ செய்வதை போதுமானதாக கருத மாட்டார். மாறாக, ஒவ்வொரு நிலைமையிலும் இறைவனோடு அவனுடைய தொடர்பு இருக்கின்றது. மேலும் இருக்கவும் வேண்டும். இந்த ஈமான் மற்றும் தொடர்பே ஒரு நம்பிக்கையாளரை சாதாரண நேரத்திலும் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான அடையாளத்தை காட்டுகின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்.

அல்லாஹ் அல்லாதவர் முன்பு குனிவது இறைவனை முறித்துக் கொள்வதாகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஒரு உண்மையான நம்பிக்கையாளரால் ஒருபோதும் இறைவனோடுள்ள தொடர்பை முறித்துக் கொள்ள எண்ணிக்கூட பார்க்க இயலாது. ஆனால் சில

நேரத்தில் பலகீனத்தின் காரணமாக துஆக்களில் குறைபாடு ஏற்பட்டு விடுகின்றது. மேலும் உலக விவகாரங்களின் காரணமாக காரணிகளின் பக்கம் கவனம் ஏற்பட்டு விடுகின்றது. அல்லது துஆக்களின் உரிமை செலுத்தப்படுவதில்லை. ஆக, நாம் ஒவ்வொருவரும் நம்முடைய நிலைமைகளை ஆராய்ந்து கொண்டே இருக்க வேண்டும். நாம் காரணிகளின் காரணமாக ஜமாஅத்தை ஏற்றுக் கொண்டதனால் ஏற்படக்கூடிய பிரச்சனையில் சிக்கிக் கொண்ட மக்களுக்காக ஒருபோதும் துஆ செய்ததை நாம் மறந்து விடக்கூடாது.

நினைவில் கொள்ளுங்கள். ஜமாஅத்திலுள்ள ஒவ்வொரு நபரது துஆவும், அல்லாஹ்வினுடைய கருணையையும், பாவ மன்னிப்பையும் வேண்டியவாறு அவனது பல்வேறு பண்புகளை ஊடகமாக வைத்து செய்யப்படுகின்ற துஆக்கள் ஜமாஅத் அளவிலுள்ள துன்பங்களையும் அகற்றுவதற்கு காரணமாக ஆகிவிடுகின்றது.

ஆக, நாம் ஒரு ஜமாஅத்தில் இணைந்திருப்பதாக வாதம் செய்கின்றோம் என்றால் பிறகு நம்முடைய துஆக்களை இறைவனிடம் ஒட்டுமொத்தமான துன்பங்கள் மற்றும் சோதனைகள் விலகுவதற்காக கேட்க வேண்டியது அவசியமானதாகும். உங்களது சொந்த துன்பங்கள் மற்றும் கவலைகளை கருத்தில் கொண்டவாறு அவர்களுக்காக துஆ செய்வதில் மட்டும் மூழ்கி இருக்காதீர்கள். மாறாக, ஜமாஅத்தான துஆக்களிலும் கூட தனது சொந்த கவலைகள் அகழ்வதற்காக ஒரு மனிதன் செய்கின்ற துஆக்களில் உள்ள அதே வேதனையையும், அமைதியின்மையும் உருவாக்குங்கள். ஜமாஅத்தின் முன்னேற்றம் மற்றும் நிலைமைகள் மாறுவதற்காக நாம் இரண்டு ரக்அத் நஃபில் தொழுகின்றோம். நான் தொழும்படி கூறியிருந்தேன். பெரும்பான்மையினர் நாங்கள் தொழுகின்றோம் என்று எனக்கு எழுதவும் செய்கின்றனர். அதிலும் உருக்கம் நிறைந்த துஆக்களை செய்யுங்கள்.....

ஆக, எங்கு நமக்கு நம்முடைய நற்செயல்களை இறைவனுக்காக தூய்மையானதாக வைக்க வேண்டிய அவசியமுள்ளதோ அங்கு ஜமாஅத்தின் கஷ்டத்தையும் தன்னுடைய கஷ்டமாக கருத்தில் கொண்டு பணிவுடன் அது நீங்குவதற்காக துஆ செய்ய வேண்டியது அவசியமாகும். ஏனென்றால் இந்த நற்செயல்கள் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு மிகப் பெரிய பங்கு வகிக்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு மனிதன் தன்னிடத்தில் தூய மாற்றத்தை ஏற்படுத்துவது அவசியமாகும். தீமையிலிருந்து தப்பிக்க இயலவில்லை என்றால் மேலும் இறைவனுடைய வரம்பை மீறுகின்றார் என்றால் துஆக்களிலும் எவ்வித தாக்கமும் ஏற்படாது.

அல்லாஹ் நம்மை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருப்பத்திற்கேற்ப நம்முடைய வாழ்க்கையில் தூய மாற்றத்தை ஏற்படுத்தியவாறு நம்முடைய எல்லா பணிகளையும் இறை விருப்பத்திற்கு ஏற்ப ஆக்கிக் கொள்பவர்களாக இருப்போமாக. இதற்காக எப்போதும் துஆ செய்ய கொண்ட இருக்க வேண்டும். அவனுடைய சந்நிதானத்தில் மன்றாடியாவாறு செய்யக்கூடிய துஆக்களின் பக்கம் கவனம் செலுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும். நம்முடைய துஆக்களை ஜமாஅத்தின் முன்னேற்றம் மற்றும் சோதனையின் காலகட்டம் நீங்குவதற்காக நம்முடைய கஷ்டங்கள் நீங்குவதற்காக நாம் எவ்வாறு துஆ செய்வோமோ அவ்வாறு செய்ய வேண்டும். நாம் ஒன்றாகி எதிரிகளுடைய தீங்கிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்காக துஆக்கள் செய்யக்கூயடிவர்களாக இருக்க வேண்டும். நான் ஆரம்பத்திலும் கூறினேன். எப்போது வரை நாம் தூய மனப்பான்மையுடன் இறைவனுக்கு முன்னால் இந்த ஒட்டுமொத்த கஷ்டங்களை நீக்குவதற்காக குனிய மாட்டோமோ நாம் விரைவாக

நம்முடைய நோக்கத்தை பெற முடியாது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்த பிறகு நம்முடைய ஒட்டுமொத்த துஆக்கள் தான் நம்முடைய தனிப்பட்ட கஷ்டங்களையும் நீக்க முடியும். எப்போது மனிதன் மற்றவருக்காக துஆ செய்வானோ அப்போது வானவர்களும் கூட அவனுக்காக துஆ செய்து கொண்டு இருப்பார்கள். குகையிலிருந்து கற்கள் எப்போது விலகி விடுகின்றது என்றால், நம்முடைய துஆக்களின் திசையும், நோக்கமும் ஒன்றாக இருக்கும் போது தான். ஜமாஅத்திலுள்ள எந்தவொரு நபரும் சுயநலத்தில் வீழ்ந்தவாறு நான் சரியாக இருந்தால் எல்லாமே சரியாக இருக்கும் என்று கருதி விடக்கூடாது. உலகத்திலுள்ள எந்தவொரு மூலையிலும் வசிக்கக்கூடிய அஹ்மதியின் கஷ்டம் நம் அனைவருடைய கஷ்டமாகும் என்ற உணர்வு நம்மிடம் உருவாக வேண்டும். மேலும் இதற்காக நமக்கு துஆக்களின் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய தேவையுள்ளது. வெறும் உணர்வு மட்டும் ஏற்படக்கூடாது. மாறாக, இது தான் ஆயுதமாகும். இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்.

நம்முடைய வெற்றிகளின் மூலம் இந்த ஆயுதம் நமது இலக்கை அடையும் படி செய்யும். ஆனால் இந்த விஷயத்தையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது நாம் உணர்ச்சிவசப்பட்டு எதிரிகளைப் பற்றி இறைவன் இவர்கள் மீது அல்லது எதிரிகளின் மீது தண்டனையை இறக்குவாயாக என்று துஆ செய்யக் கூடாது. மாறாக, அல்லாஹ்வே! நாங்கள் வெற்றியை விரும்புகின்றோம். எனவே, சோதனை மற்றும் கஷ்டத்தின் இந்த காலகட்டத்தை நீக்குவதற்காக உன்னிடம் துஆ கேட்கின்றோம் என்றே துஆ செய்ய வேண்டும். இந்த கஷ்டத்தின் காலகட்டம் விலகுவதற்காகவே நாங்கள் துஆ செய்கின்றோம். இறைவா! நாம் அவர்களுக்காகவும் நல்லதையே நாடுகின்றோம். அவர்களுடைய அழிவை விரும்பவில்லை. எங்களுடைய குறைகளை உன்னுடைய அருள் தான் மூடி மறைத்துள்ளது. நிலைமைகள் கடினமாக இருந்த போதிலும் நாங்கள் உன்னுடைய அருள்களின் காட்சிகளை தான் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

நீ இந்த மக்களுக்கு நேர்வழியை காட்டினால் இது அவர்களுக்கும் எங்களுக்கும் மிகப் பெரும் நற்பேராகும். ஆனால் உன்னுடைய ஞானம் சிலரை இதற்கு தகுதியுடையவர்களாக கருதவில்லை என்றால் மேலும் அவர்களை அழிப்பது தான் சிறந்தது என்றால் உண்மையான இஸ்லாமாகிய அஹ்மதிய்யத்துடன் தொடர்புடை இஸ்லாத்தின் முன்னேற்றத்திதில் அவர்கள் தடைகளாக இருக்காத விதத்தில் எங்களது வழியிலிருந்து அவர்களை அகற்றி விடுவாயாக.

எங்கு இந்த துஆ இருக்கின்றதோ அங்கு அல்லாஹ்வின் நுட்பமான ஞானம் எதை நாடுகின்றதோ அதுவும் துஆவாக ஆகிவிடும். இதன் அடிப்படையில் நாம் துஆ செய்ய வேண்டும். வெளிப்படையாக தீய துஆ செய்யக்கூடாது. அல்லாஹ் நம் அனைவருக்கும் துஆக்களுக்குரிய உரிமையை செலுத்துவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

Nazarath Nashr-o-Isha'ath, Qadian — Translated By Muallim. A. Khaleel Ahmad